திரு டி. மார்ட்டின் : மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் சர்வீசில் இருக்கக்கூடியவர்களுக்கு 18 என்றும், டைரக்ட் ரெக்ரூட் 6 என்றும் இருந்ததை மாற்ற அரசு நினைத்திருப்பதாகவும், அது கூடாது என்பதற்காக சப் ஜட்ஜ், முன்சீப் மகாநாடு திருச்சியில் நடந்ததாகக் கூறப்படுகிறதே, ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : முதலில் இருந்த விகிதாசாரத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று உயர்நீதி மன்றம் சிபார்சு செய்தது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்கனவே இது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

Employment Exchange at Erode.

***719 Q.—Thiru K. SAHADEVA KANDER**: Will the Hon. Minister for Industries be pleased to state—

(a) whether an Employment Exchange has been opened in Erode ; and

(b) if so, the employment potential in the area ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வேலைவாய்ப்புத் துணை அலுவலகம் ஒன்று ஈரோடில் திறக்கப்பட்டுள்ளது. இது 19—11—1969 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

(இ) 25 தொழிலாளர்களும் அதற்குமேலும் வேலைக்கு அமர்த்தும் 71 நிறுவனங்கள் ஈரோடு வட்டத்தில் உள்ளன. சுமார் 8,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பஞ்சாலையும் இதில் அடங்கும். வெளுத்தல், சாயம்போடுதல், வண்ண அச்சிடுதல், ஆகிய பணிகளை இந்த வட்டத்தில் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகும். இதைத் தவிர தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்கும் கருவி அறைப்பட்டறை ஒன்றும் இருக்கிறது. ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் 2 கல்லூரிகளும இருக்கின்றன. ரயில்வே டீசல் என்ஜின் கொட்டகை ஒன்றும் கூட வேலைவாய்ப்பு அளிக்கிறது. தற்போது இந்த வட்டத்தில் வேலை வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

அஞ்சல் படிவங்களில் தமிழ்.

*** 720—வின. திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிடைக்கும் தபால் கார்டு, கவர், தந்தி பாரங்களில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். அஞ்சல் படிவங்களைப் பொறுத்த வரையில் அவை இந்தி, ஆங்கிலம் வட்டார மொழி ஆகியவற்றில் அச்சிடப்படுகின்றன என்றும், நீளமான படிவங்களைப் பொறுத்த வரையில் இந்தி, ஆங்கிலம், வட்டார மொழி ஆகியவற்றில் அவை தனித்தனியாக அச்சிடப்படுகின்றன என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது. அஞ்சல் அட்டைகள், உள்நாட்டு அஞ்சல் தாள், அஞ்சல் உறைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் எல்லா வட்டார மொழிகளிலும் அவற்றை அச்சிட்டு வெளியிடுவது கடினமென்றும் ஒவ்வொரு வட்டாரத்திற்கென தனித்தனியாக அச்சிடுவதனுல் ஏராளமான செலவாகும் என்றும் பிற வட்டார மக்களுக்கு அது புரியாதென்பதும் அவர்களது கருத்தாகும்.

1970 ஏப்ரல் 8]

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மத்திய அரசு பிராந்திய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் அஞ்சல் அட்டைகளைப் பிராந்திய மொழிகளில் அச்சிடுவதில் கவனக் குறைவாக இருக்கிறது. பிராந்திய மொழிகளில் அச்சிடுவதே அதிக உபயோகமாக இருக்கும் என்பதனால் நமது அரசு உடனடியாக இதில் அக்கறை காட்டி, பிராந்திய மொழிகளில் அச்சிடுவதை வலியுறுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம் அரசாங்கத்தின் கருத்தும் அதுதான். எனவே மீண்டும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. கே. விநாயகம் : இன்று ஆட்சியில் இருக்கிற கட்சியின் அடிப்படையான கொள்கையே இது தான். அஞ்சல் அட்டைகள், டெலிகிராப் பாரம் ஆகியவை பிராந்திய மொழிகளிலேயே இருக்க வேண்டுமென்று சொல்லி வந்தும், இந்தக் கட்சி செல்வாக்கு பெற்றிருக்கிற காலத்தில் அதைக் கொண்டுவர முடியவில்லை என்றால் பிறகு எப்படிக் கொண்டுவருவது ? ஆகவே அதைக் கொண்டுவர யோசனை என்ன ? அப்படிக் கொண்டுவர போராட்டம் ஒன்றையே இந்தக் கட்சி நடத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் போராட்டத்திற்கு தலைமை தாங்க முன் வருவாரா ? மாநில சுயாட்சிக் கோரிக்கையிலேயே இது அடங்கியிருக்கிறது.

திரு. என் வரதராஜன் : மெஜாரிட்டி மக்களுக்கு—நூற்றுக்கு 66 சதவிகித்திற்கு படிக்கத் தெரியாதவர்கள் என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மக்களும் அதற்கு உட்பட்டவர்கள். ஆகவே, சாதாரண பாரங்கள் எல்லாம் பிராந்திய மொழிகளில் இருந்தால் தான் உபயோகமாக இருக்கும். இந்தப் பிராந்திய மொழிப் பிரச்சினை உணர்ச்சி பெற்று வெடிக்கிறபோது மத்திய சர்க்கார் இதை மதிக்கிறேன் என்று சொல்வது, பின்னாலே மிதிக்கிறேன் என்று சொல்கிற நிலையில்தான் நடக்கிறது. ஆகவே இந்த பாரங்கள் எல்லாம் பிராந்திய மொழிகளிலேயே அச்சிட வேண்டுமென்று வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முன்பு நான் சொன்ன பதிலிலேயே இந்த அரசு அதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது என்று தான் சொன்னேன்.

மாயூரம் சந்திப்புக்குத் தெற்கே மேம்பாலம்.

***721 வினா திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சந்திப்பு புகைவண்டி நிலையத்திற்கு தெற்கே ரயில்வே மேம்பாலம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா ; ஆம், இது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையின் கீழ் இருக்கின்றது.

திரு. என் கிட்டப்பா : மேற்கண்ட மாயூரம் மேம்பாலத்திற்கு மத்திய மாநில அரசின் பங்குத் தொகையை அறிவிக்க இயலுமா ? அது எப்போது துவங்கப்பட இருக்கிறது என்று அறிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்திற்கு நியூ சர்வீசாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. நா. காசிராமன் : இந்த மேம்பாலத் திட்டத்திற்கு என்ன செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?